தினகரன் 3
வேலூர் 11 நவம்பர் 2010

## சர்க்கரை நோயை குணப்படுத்த

# நியூயார்க் பல்கலையுடன் இணைந்து வேலூர் சிஎம்சியில் ஆராய்ச்சி

**வேலூர், நவ.11:** 'வைட்டமின் டி பற்றாக்குறையால் ஏற்படும் சர்க்கரை நோயை குணமாக்க நியூயார்க் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேலூர் சிஎம்சியில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது' என்று சிஎம்சி மருத்துவமனை அகசுரபியியல் துறை பேராசிரியர் நிஹல்தாமஸ் கூறினார்.

ஆண்டு தோறும் நவம்பர் 14ம்தேதி உலகசர்க்கரை நோய் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதையொட்டி சிஎம்சி மருத்துவமனை சார்பில் 13ம் தேதி விழிப்புணர்வு சைக்கிள் பேரணி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விருதம்பட்டு ஐடா ஸ்கடர் பள்ளி அருகில் பேரணியை டி.ஐ.ஜி.ஜெய்ராம்தொடங்கிவைக்கிறார். காட்பாடி ஓர்த் டிரஸ்ட் வரை பேரணி நடக்கிறது.

இதுகுறித்துநேற்றுமருத்துவமனையின்பேராசிரியர் நிஹல்தாமஸ்நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

சர்க்கரை நோய் பல் வேறு காரணங்களால் வருகிறது. குறிப்பாக பெற்றோருக்கு சர்க்கரை நோய் இருந்தால் பரம்பரை வியாதியாகவும், உடல் பருமன், உடல் உழைப்பு இல்லாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து வேலைசெய்பவர்களுக்கும் சர்க்கரை நோய் அதிகமாக வருகிறது. இந்தியாவில் 30 முதல் 40 சதவீதம் பேருக்கு சர்க்கரை நோய் உள்ளது.

சர்க்கரை நோய் உள்ளவர்களில் 80 சதவீதம் பேர் 30வயதுக்குமேல் உள்ளவர்கள். வைட்டமின் டி குறைபாடு இருப்பதும் சர்க்கரை நோய் வர முக்கிய காரணமாக உள்ளது என்று கண்டறியப்பட்டு உள்ளது. சூரிய வெளிச்சத்தில்வைட்டமின் டி அதிகமாக உள்ளது.

ரத்தத்தில் 30 நானோகிராம் அளவுக்கு மேல் வைட்டமின் டி இருக்கவேண்டும். உலகில் 30சதவீதம்பேருக்கு வைட்டமின் டி பற்றாக்குறைஉள்ளது.வைட்டமின் டி குறைபாட்டால் சர்க்கரை நோய் ஏற்பட்டவர்களுக்கு வைட்டமின் டி பவுடர் கொடுத்து குணமாக்க முடியுமா? என்பது குறித்து வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் ஆராய்ச்சி நடந்து வருகிறது.நியூயார்க்கில் உள்ள ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்தியாவிலேயே சிஎம்சி மருத்துவமனையில் தான் இந்த ஆராய்ச்சிமேற்கொள்ளப்படுகிறது.எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளுக்கும் எதிர்காலத்தில் சர்க்கரை நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது.இந்தியாவில்26சதவீத குழந்தைகள் எடை குறைவாக பிறக்கிறது. கருவுற்ற பெண்கள்உணவில்போதிய ஊட்டச்சத்து எடுத்துக் கொள்ளாமல் இருப்பது குழந்தையின் எடை குறைய முக்கிய காரணமாக உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.